# பத்திரிக்கை செய்தி

## அரசு நிதியை முறைகேடு செய்த வழக்கில் அப்போதைய பணி ஆய்வாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுக்கா, மூட்டாம்பட்டி கிராமத்தில், வேலைக்கு உணவு திட்டதின் கீழ் ஆரணிகுளத்தில் கழுங்கி கட்டியுள்ளனர். கழுங்கி கட்டியதில் போலியான நபர்களையும் வேலை செய்யாத நபர்களையும் கணக்கில் காட்டி அரசு நிதியில் முறைகேடு செய்ததாக பொதுப்பணித்துறையைச் சேர்ந்த உதவி செயற்பொறியாளர் திரு.தங்கரத்தினம், 2)திரு. பிரபாகரன், உதவி பொறியாளர், 3) திரு.நடராஜன், பணி ஆய்வாளர் ஆகியோர்கள் மீது கடந்த 1989ம் ஆண்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை புதுக்கோட்டை பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள், புதுக்கோட்டை நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் திரு.தங்கரத்தினம் மற்றும் திரு.பிரபாகரன் காலமாகிவிட்டனர். இவ்வழக்கில் இன்று 14.03.2025 திரு.நடராஜன், பணி ஆய்வாளருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மொத்தம் ரூ.5,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.